(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 435.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2015 பெப்புருவரி 19, வியாழக்கிழமை, பி.ப. 1.00 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

3713/ '13

1.

கௌரவ அனுர திசாநாயக்க,— பிரதம அமைச்சரும் கொள்கை உருவாக்கம், பொருளாதார அலுவல்கள், சிறுவர், இளைஞர் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (5)

(அ) (i) 2010, 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் சனாதிபதி நிதியத்திற்குக் கிடைத்துள்ள நிதி எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி நிதி பெற்றுக் கொள்ளப்பட்ட முறை யாது என்பதையும்

வருடாந்த அடிப்படையில் தனித்தனியாக அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) சனாதிபதி நிதியத்தினால் கடந்த இரண்டு வருட காலப்பகுதியில் செலவிடப்பட்டுள்ள மொத்தப் பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) ஒவ்வொரு துறை ரீதியாக செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு என்பதையும்

வருடாந்த அடிப்படையில் தனித்தனியாக அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) சனாதிபதி நிதியத்தினால் மருத்துவ சிகிச்சைகளுக்கு உதவி வழங்குவதற்காக ஆட்களைத் தெரிவு செய்கின்ற அடிப்படை யாது என்பதையும்;

(ii) கடந்த 03 வருட காலப்பகுதிக்குள் பிரதேச சபைகள், மாகாண சபைகள் மற்றும் பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற உறுப்பினர்களுக்காக மருத்துவ சிகிச்சைகளுக்கு சனாதிபதி நிதியத்திலிருந்து உதவி வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அவர்களின் பெயர்கள் மற்றும் ஒவ்வொருவருக்கும் வழங்கப்பட்டுள்ள பணத் தொகைகள் எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3922/ '13

2.

கௌரவ புத்திக பதிரண,— அரசாங்க நிர்வாக, மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் சனநாயக ஆட்சி பற்றிய அமைச்சரும் புத்தசாசன அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—(4)

(அ) (i) கண்டி நகரத்தில் சேருகின்ற குப்பை கூளங்கள் கண்டி கொஹாகொட பிரதேசத்தில் மகாவலி கங்கைக்கு அருகாமையிலுள்ள இடமொன்றில் அகற்றப்படுகின்றதென்பதையும்;

(ii) அவ்விடத்தில் விலங்குப் பண்ணையொன்று பேணிவரப்படுகின்றதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி இடத்தில் விலங்குப் பண்ணையொன்றை பேணிவருவதற்கு சட்டரீதியான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி அனுமதி வழங்கப்பட்டுள்ள நிறுவனம் அல்லது நிறுவனங்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி விலங்குப் பண்ணை உரிமையாளரின் பெயர் மற்றும் முகவரி யாதென்பதையும்;

(iv) மேற்படி விலங்குப்பண்ணையின் உரிமையாளர் இந்த தொழில்முயற்சிக்கு மேலதிகமாக வேறு நிறுவனமொன்றில் தொழில் புரிவாராயின் அந்நிறுவனத்தின் பெயர் மற்றும் அவர் வகிக்கும் பதவி யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

4769/ '14

3.

கௌரவ அசோக் அபேசிங்ஹ,— முஸ்லிம் சமய அலுவல்கள் மற்றும் தபால் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) குருநாகல் மாவட்டத்தில் நிரந்தர சேவையில் ஈடுபட்டுள்ள உப தபால் அதிபர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அரச ஊழியர்களுக்குரிய சிறப்புரிமைகளை உப தபால் அதிபர்களுக்கும் வழங்குவாரா என்பதையும்;

(iii) சனிக்கிழமை நாட்களில் கடமையாற்றுவதற்காக உப தபால் அதிபர்களுக்கு மேலதிக கொடுப்பனவொன்றை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4845/ '14

4.

கௌரவ அஜித் மான்னப்பெரும,— மின்வலு, எரிசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) நுரைச்சோலை அனல்மின் நிலையம் தரமற்ற மின்நிலையமென மின்வலு, எரிசக்தி அமைச்சின் செயலாளர் கூறியுள்ளாரென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) மேற்படி மின்நிலையத்தின்,

(i) முதலாம் கட்டத்திற்காக மதிப்பிடப்பட்ட பணத் தொகை மற்றும் செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு;

(ii) தரம், உபகரணங்கள் மற்றும் செயற்பாட்டு நிலைமை சம்பந்தமாக ஏற்புடைய நிர்மாணிப்புக் கம்பனியுடன் உத்தரவாதக் காலப்பகுதியுடனான உடன்படிக்கையொன்று மேற்கொள்ளப்பட்டிருந்ததா;

(iii) தரமற்ற நிலைமை மற்றும் இடம்பெறுகின்ற செயலிழப்புக்கள் சம்பந்தமாக மின்நிலையத்தை நிர்மாணித்த கம்பனிக்கு எதிராக மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை;

(iv) திருத்தவேலைகளுக்காகவும் அக்காலப்பகுதியில் இழந்த மின்சாரத்தை பெற்றுக் கொள்வதற்காகவும் செலவாகிய பெருந்தொகைப் பணத்தை அதற்குப் பொறுப்புக்கூற வேண்டியவர்களிடமிருந்து அறவிட நடவடிக்கை எடுப்பாரா;

(v) முதலாம் கட்டத்தை சரிவர நிர்மாணிக்காத கம்பனியே அதன் அடுத்த கட்டங்களையும் நிர்மாணிப்பதாயிருப்பின் அதற்கான காரணங்கள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) எதிர்காலத்தில் பொதுமக்களுக்கு நன்மைகளைப் பெற்றுக்கொடுக்கக்கூடிய வகையில் மின்சாரத்தை உற்பத்திசெய்ய திட்டமிடப்படுள்ளதா;

(ii) மின்சாரக் கட்டணப்பட்டியல் குறைவடைய ஏதுவாக அமையக்கூடிய அத்திட்டம் காலவரையறைகள் சகிதம் யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

5183/ '14

5.

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— மின்வலு, எரிசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ள நுரைச்சோலை அனல் மின் நிலையத்தின் 300 மெ.வொ. கொள்ளளவுடன் கூடிய முதலாவது கட்டத்தின் தற்போதைய தொழிற்பாட்டு நடவடிக்கைகளையும் பராமரிப்பு பணிகளையும் மேற்கொள்கின்ற நிறுவனம் யாதென்பதையும்;

(ii) மேற்படி பொறுப்பு கையளிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி மின் உற்பத்தி நிலையத்தின் தொழிற்பாட்டு நடவடிக்கைகளையும் பராமரிப்பு பணிகளையும் முன்னெடுத்துச் செல்வதற்காக அதன் நிர்மாணப் பணிகளை மேற்கொண்ட சீன கம்பனிக்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அத் திகதி யாதென்பதையும்;

(iii) மேற்படி மின் உற்பத்தி நிலையத்தின் இரண்டாவது மற்றும் மூன்றாவது கட்டங்களின் பணிகளை நிறைவு செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள திகதிகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5196/ '14

6.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— மின்வலு, எரிசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) இலங்கையில் தற்சமயம் இயங்கும் நிலக்கரி மின் உற்பத்தி நிலையங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அந்த மின் உற்பத்தி நிலையங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) புதிதாக நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள நிலக்கரி மின் உற்பத்தி நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி மின் உற்பத்தி நிலையங்கள் தாபிக்கப்படும் பிரதேசங்கள் யாவை என்பதையும்;

(v) மேற்படி நிர்மாணிப்புகளுக்குத் தேவையான காணிகளை பெற்றுக்கொள்ளும் முறையியல் யாதென்பதையும்;

(vi) நுரைச்சோலை அனல் மின் நிலையத்திலிருந்து தற்போது உற்பத்தி செய்யப்பட்டுள்ள மின் அலகுகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(vii) இது இலங்கையின் மின்சாரத் தேவையில் எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5416/ '14

7.

கௌரவ அஜித் குமார,— அரசாங்க நிர்வாக, மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் சனநாயக ஆட்சி பற்றிய அமைச்சரும் புத்தசாசன அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கொழும்பு மாவட்டத்தில் தனியார் துறையினராலும் அரசாங்கத்தினாலும் பேணிவரப்படுகின்ற வாகனத் தரிப்பு நிலையங்களின் எண்ணிக்கை யாது;

(ii) அவை அமைந்துள்ள இடங்கள் யாவை

என்பதை உள்ளூராட்சி நிறுவன மட்டத்தில் அவர் சபையில் சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) அரசாங்க காணிகளை வாகனத் தரிப்பு நிலையங்களாகப் பேணிவருவதற்காக தனியார் துறையினருக்கு பெற்றுக்கொடுக்கின்ற முறையியல் யாது;

(ii) 2011 – 2013 ஆண்டு வரை அவ்விதமாக குத்தகைக்கு விட்டதன் மூலம் பெறப்பட்ட வருமானம் யாது;

(iii) அந்த வாகனத் தரிப்பு நிலையங்களில் ஒவ்வொரு வாகன வகைக்கும் ஏற்ப அறவிடப்படுகின்ற கட்டணங்கள் யாவை;

(iv) கட்டணம் தீர்மானிக்கப்படுகின்ற அளவுகோல்கள் யாவை;

(v) அந்த அளவுகோல்கள் தயாரிக்கப்பட்ட முறையியல் யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) வாகனத் தரிப்பு நிலையங்களைப் பராமரிக்கின்ற நிறுவனம் மற்றும் ஏற்புடைய செலவுத் தலைப்பு யாது;

(ii) வாகனத் தரிப்பு நிலையங்களுக்கு ஏற்படுகின்ற சேதங்களை அவற்றைப் பொறுப்பெற்றுள்ள தரப்பினர்களிடமிருந்து அறவிட்டுத் தீர்த்துக் கொள்வதற்கான முறையியலொன்று உள்ளதா;

(iii) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) (i) அரசாங்க காணிகளை தனியார் துறையினருக்கு கையளிப்பதற்கான நோக்கங்கள் யாவை;

(ii) அரசாங்கம் வாகனத் தரிப்பு நிலையங்களைப் பேணிவரும் பொறுப்பினை ஏற்காதிருப்பது ஏன்;

(iii) அரசாங்கத்தினால் பொது வாகனத் தரிப்பு நியைங்களைப் பேணிவருவதற்கான எதிர்காலத் திட்டமொன்று உள்ளதா

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

4088/ '13

8.

கௌரவ புத்திக பதிரண,— முஸ்லிம் சமய அலுவல்கள் மற்றும் தபால் அமைச்சரைக் கேட்பதற்கு ,— (3)

(அ) (i) நாடு முழுவதிலும் அமைந்துள்ள அஞ்சல் அலுவலகங்களை வலையமைப்பு செய்வதற்கான கருத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதென்பதை அறிவாரா;

(ii) இதற்கான உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்ட நிறுவனத்தின் பெயர் யாது;

(iii) அவ்வுடன்படிக்கையை கைச்சாத்திடுவதற்கு முன்னர் சாத்தியவள ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டதா;

(iv) சம்பந்தப்பட்ட உடன்படிக்கையின் பிரதியொன்றினை இச்சபைக்குச் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுப்பாரா;

(v) அவ்வுடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட திகதி யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அஞ்சல் அலுவலக வலையமைப்புக் கருத்திட்டத்திற்காக செலவிட எதிர்பார்த்துள்ள பணத்தொகை யாது;

(ii) அக்கருத்திட்டத்தின் காலவரையறை யாது;

(iii) வலையமைப்பாக்கபட்ட அஞ்சல் அலுவலகங்களின் எண்ணிக்கை கட்டங்கட்டமாக தனித்தனியாக எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4467/ '13

9.

கௌரவ அனுர திஸாநாயக்க,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2010, 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் ஐக்கிய அமெரிக்காவின் இலங்கை தூதரகம் Patton Boggs எனும் கம்பனியுடன் கொடுக்கல் வாங்கல் மேற்கொண்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி கொடுக்கல் வாங்கல் இடம்பெற்றுள்ள காலப்பகுதி யாதென்பதையும்;

(iii) மேற்படி கொடுக்கல் வாங்கல் மூலமாக நிறைவேற்றப்பட்டுள்ள பணி அல்லது பணிகள் யாவையென்பதையும்;

(iv) அதன் மூலம் கிடைத்துள்ள நன்மைகள் யாவையென்பதையும்;

(v) மேற்படி பணிகளுக்காக மேற்கொள்ளப்பட்டுள்ள கொடுப்பனவுகளின் பெறுமதி யாதென்பதையும்;

(vi) அதற்காக நிதி ஒதுக்கப்பட்ட செலவுத் தலைப்பு யாதென்பதையும்;

(vii) மேற்படி கம்பனிகளுடன் உடன்படிக்கைகள் கைசாத்திடப்பட்டிருப்பின், அந்த உடன்படிக்கைகளை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்

அவர் இச்சபையில்அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4777/ '14

10.

கௌரவ அசோக் அபேசிங்ஹ,— சுகாதார மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் மலேரியா நோய் முற்றாக ஒழிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) இலங்கையில் அண்மைக் காலத்தில் மலேரியா நோயாளர்கள் மீண்டும் இனங்காணப்பட்டுள்ளனர் என்பதை அறிவாரா என்பதையும்;

(iii) டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவதற்காக உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட BTI குடம்பி நாசினிப் பிரயோகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவதற்காக இறக்குமதி செய்யப்பட்ட வெளிநாட்டு BTI குடம்பி நாசினி பூரணமாக விநியோகிக்கப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5023/ '14

11.

கௌரவ அஜித் மான்னப்பெரும,— உள்ளக போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) கம்பஹா புகையிரத நிலையத்தின் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளும் ஒப்பந்த நிறுவனத்தின் பெயர் யாதென்பதையும்;

(ii) குறித்த நிறுவனம் தெரிவு செய்யப்பட்ட அடிப்படை யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) அந்த நிறுவனத்தால் மேற்கொள்ளப்படும் மேற்படி புகையிரத நிலையத்தின் அபிவிருத்திக்கான உத்தேச திட்டத்தை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(ii) குறித்த அபிவிருத்திப் பணிகளுக்காக செலவாகும் பணத் தொகை யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5198/ '14

12.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— வெகுசன ஊடக, பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ஸ்ரீ லங்கா மிரர் (Sri Lanka Mirror) எனப்படும் இணையத்தளம் அப்போதைய வெகுசன ஊடக, தகவல் அமைச்சில் பதிவுசெய்யப்பட்டிருந்ததா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்;

(iii) மேற்படி பதிவுக்காக அறவிடப்பட்ட கட்டணம் யாதென்பதையும்;

(iv) உரியவாறு பதிவுசெய்யப்பட்ட மேற்படி இணையத்தளத்தை கொண்டுநடாத்தும் இடத்தை குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் பரிசோதனைக்கு உள்ளாக்கி அங்கிருந்த கணினிகளை அவர்களது பொறுப்பின் கீழ் கொண்டுவந்தார்களா என்பதையும்

(v) ஆமெனில், அத்தேதி யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களது மேற்படி நடவடிக்கைக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட 2 அடிப்படை மனித உரிமைகள் வழக்குகளுக்கு ஏற்புடையதாக வழங்கப்பட்டுள்ள தீர்மானத்தின் படி, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பொறுப்பின் கீழ் கொண்டுவரப்பட்ட கணினிகள் மீண்டும் ஸ்ரீ லங்கா மிரர் நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்டதா என்பதையும்;

(ii) அமைச்சில் பதிவுசெய்யப்பட்டுள்ள ஒரு செய்தி இணையத்தளத்திற்கு ஏற்புடையதாக இணைய வசதிகளை வழங்கும் நிறுவனங்களின் சேவை தொடர்ச்சியாகவே தடைபடுமெனில் அந்த அமைச்சினால் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5422/ '14

13.

கௌரவ அஜித் குமார,— சுகாதார மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) குருநாகல் பொது வைத்தியசாலையின் சீ.ரீ. ஸ்கேனர் இயந்திரம் குறிப்பிடத்தக்களவு காலமாக சீர்கெட்டுள்ளதென்பதையும்;

(ii) ஸ்கேனர் இயந்திரம் சீர்கெட்டுள்ளதனால் வைத்தியசாலைக்கு வருகை தருகின்ற நோயாளர்கள் அச்சேவையைப் பெற்றுக் கொள்வதற்காக தனியார் நிறுவனங்களுக்குச் செல்ல வேண்டி நேரிட்டுள்ளதால் பெரும் தொகைப் பணத்தை செலவிட வேண்டி நேரிடுகின்றதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி ஸ்கேனர் இயந்திரத்தை திருத்தியமைப்பதற்கு அல்லது புதியதொரு ஸ்கேனர் இயந்திரத்தைப் பொருத்துவதற்கு ஏற்கனவே ஏதேனும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) இதற்கு எவ்வளவு காலம் எடுக்கும் என்பதையும்;

(iii) இதற்காக அமைச்சு ஏற்கும் செலவினம் எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4265/ '13

14.

கௌரவ புத்திக பதிரண,— நெடுஞ்சாலைகள், உயர் கல்வி மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தென் அதிவேகப் பாதையை மாத்தறை, கொடகம தொடக்கம் அம்பாந்தோட்டை, மத்தல வரை நீடிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றதென்பதையும்;

(ii) திஹகொடை, கிரிந்த மற்றும் தெவிநுவர பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு மிகவும் அண்மித்ததான தென் அதிவேகப் பாதைக்கு நுழைவிடமாக அப்பரெக்க வீதியை முன்மொழிந்து அளவை நடவடிக்கைகள்கூட மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதையும்;

(iii) உத்தேசிக்கப்பட்ட அப்பரெக்க நுழைவுப் பாதையை மாற்றி அதனை கிரிந்த புஹுல்வெல்ல பிரதேச செயலாளர் பிரிவின் வலகந்த பிரதேசத்திற்கு கொண்டு செல்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என்பதையும்;

(iv) நுழைவுப்பாதையானது மேற்படி (iii) இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மாற்றத்திற்கு உள்ளாக்கப்படுமெனில் அதிகளவிலான மக்களுக்கு அனுகூலங்கள் கிடைப்பதற்குள்ள வாய்ப்பு குறைவடையும் என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) ஆமெனில், தென் அதிவேகப் பாதைக்கான நுழைவிடத்தை மேற்படி அ (iii) இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மாற்றியமைக்காதிருக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4469/ '13

15\.
கௌரவ அனுர திஸாநாயக்க,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) (i) 2010, 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் ஐக்கிய அமெரிக்காவின் இலங்கை தூதரகம் Qorvis Communications எனும் கம்பனியுடன் கொடுக்கல் வாங்கல் மேற்கொண்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி கொடுக்கல் வாங்கல் இடம்பெற்றுள்ள காலப்பகுதி யாதென்பதையும்;

(iii) மேற்படி கொடுக்கல் வாங்கல் மூலமாக நிறைவேற்றப்பட்டுள்ள பணி அல்லது பணிகள் யாவையென்பதையும்;

(iv) அதன் மூலம் கிடைத்துள்ள நன்மைகள் யாவையென்பதையும்;

(v) மேற்படி பணிகளுக்காக மேற்கொள்ளப்பட்டுள்ள கொடுப்பனவுகளின் பெறுமதி யாதென்பதையும்;

(vi) அதற்காக நிதி ஒதுக்கப்பட்ட செலவுத் தலைப்பு யாதென்பதையும்;

(vii) மேற்படி கம்பனிகளுடன் உடன்படிக்கைகள் கைசாத்திடப்பட்டிருப்பின், அந்த உடன்படிக்கைகளை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

### பிரேரணை முன்னறிவித்தல்

1\.
கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி,— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"சுஜீவ சேனசிங்க மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

---

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.
குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்புச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 2.
புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகாரசபை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 3.
ஆட்சியுரிமை (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2014, ஓகத்து 07) [1].

* 4.
சுரங்கங்கள், கனிப்பொருட்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 5.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— ஐக்கிய நாடுகள் சபைச் சட்டத்தின் ஒழுங்குவிதிகள்,— 1968 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க ஐக்கிய நாடுகள் சபைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் வெளிநாட்டலுவல்கள் அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2014 திசெம்பர் மாதம் 11 ஆம் திகதிய 1892/37 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2015.02.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 6.

நிதி அமைச்சர்,— முத்திரைக் கட்டண (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, முத்திரைக் கட்டண (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழான முத்திரைக் கட்டணம் தொடர்பில் நிதி, திட்டமிடல் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2014 செத்தெம்பர் 30 ஆம் திகதிய, 1882/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.12.12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 7.

மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சர்.— இலங்கை மின்சாரச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, இலங்கை மின்சாரச் சட்டத்தின் 54 ஆம் பிரிவின் கீழ் மின்வலு, சக்தி அமைச்சரால் இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் சிபாரிசுகளின் பேரில் மின்சார (அனுமதிப்பத்திரம் தொடர்பில் விண்ணபித்தலும் விலக்களிப்பும்) தொடர்பில் ஆக்கப்பட்டு, 2014 ஒற்றோபர் 10 ஆம் திகதிய, 1883/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.11.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 8.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.1),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் குவைட் நாட்டரசின் அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங் களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 நவெம்பர் மாதம் 05 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாகவுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 9.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.2),— முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம் மற்றும் வியட்நாம் சோசலிச குடியரசு அரசாங்கம் ஆகியவற்றுக்கிடையேயான ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 10.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல. 3),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் செக் குடியரசு அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2011 மார்ச் 28 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும், 2014.08.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது தேசிய பொருளாதார அபிவிருத்திக்கு அத்தியவசியமாகவுள்ளதென இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 11.

உள்நாட்டு போக்குவரத்து அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவுடனும் 19 ஆம் உட்பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படும் அச் சட்டத்தின் 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2013 யூலை மாதம் 31 ஆந் திகதிய 1821/31 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.11.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 12.

நீதி மற்றும் தொழில் உறவுகள் அமைச்சர்,— ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— காலத்துக்குகாலம் திருத்தப்பட்டவாறான 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் 46 ஆம் பிரிவின் கீழ் தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2013 மே மாதம் 13 ஆந் திகதிய 1810/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.06.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 13.

காணி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் மற்றும் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 14.

சுற்றுலா மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்,— தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை,— (469 ஆம் அத்தியாயமான) தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 திசெம்பர் மாதம் 06 ஆந் திகதிய 1735/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.12.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

15.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

16.

தற்காப்புக் கலைகளுக்கான நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

17.

த இன்ஸ்ரிரியூட் ஒவ் சேர்டிபைட் பப்ளிக் எக்கவுன்டன்ஸ் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

18.

மெடிசினா ஓல்டனேடிவா நிறுவனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

19.

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — பரிசீலனை.

20.

அல் ஜாமியாத்துல் கவ்ஸிய்யா (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

21.

இலங்கை நிர்மாணக் கைத்தொழில் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.

---

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.